
# காலமில்லாக் காலம்

நபீல்



உயிர்மை பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமில்லாக் காலம்

நபீல்

உயிர்மை
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூ. 60

உயிர்மை பதிப்பக வெளியீடு : 296

காலமில்லாக் காலம் ⁄⁄ கவிதைகள் ⁄⁄ ஆசிரியர்: நபீல் ⁄⁄ © நபீல் ⁄⁄ முதல் பதிப்பு: டிசம்பர் 2009 ⁄⁄ வெளியீடு: உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை -600 018 தொலைபேசி: 91-44 - 24993448, மின்னஞ்சல்: uyirmmai@ gmail.com, இணையதளம்: www.uyirmmai.com ⁄⁄ அட்டை வடிவமைப்பு: ஆ. கதிர் ⁄⁄ அச்சாக்கம்: மணி ஆஃப்செட், சென்னை 600 005

Kaalamillak kaalam ⁄⁄ Poems ⁄⁄ Author : Nafeel ⁄⁄ © Nafeel ⁄⁄ Language: Tamil ⁄⁄ First Edition : Dec.2009 ⁄⁄ Demy 1x8 ⁄⁄ Paper : 18.6 kg maplitho ⁄⁄ Pages: 104 ⁄⁄ Published by : Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/ Fax : 91-44 -24993448, e-mail : uyirmmai@gmail.com, Website: www.uyirmmai.com ⁄⁄ Cover Designed by A. Kathir ⁄⁄ Printed at Mani Offset, Chennai 600 005 ⁄⁄ Price : Rs. 60

**ISBN : 978-93-80072-85-2**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபீல்

றிஸ்வியூ முஹம்மத் நபீல் என்கிற நபீல் இலங்கைத் தென்கிழக்கின் கல்முனையில் 1967இல் பிறந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியில் டிப்ளோமா பட்டம் பெற்றார். கொழும்பு துறைமுகத்தில் பணிபுரிந்து வரும் இவர் சுதந்திர இலக்கிய விழா, விபவி படைப்பிலக்கியம், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு என்பனவற்றில் விருதுகளும் பாராட்டுகளும் பெற்றுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாள ராகவும் பணியாற்றி வரும் நபீல் மனைவி, மூன்று குழந்தைகளுடன் வசித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

சரிநிகர் – மூன்றாவது மனிதன் – ஓசை – சுவடுகள் – எங்கள் தேசம் – மீள்பார்வை – தினகரன் – வீரகேசரி – உயிர்எழுத்து – நியதி – இருப்பு – முஸ்லிம்தேசம் – மல்லிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மா

வாப்பா

என்னை விட்டுப்போன

அன்புச் சாச்சா எஸ். ஆதம்பாவா அதிபர்

அவர்களுக்கும்

என் ஜனுவுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெது மெதுவாகத்தான் தொடங்கியது அது

நான் இலக்கியத்திற்கு வரவில்லை.
அதுதான் என்னிடம் வந்தது.
எனக்குப் பதின்நான்கு வயதாக இருக்கும் போது
அது நிகழ்ந்தது.

என் மச்சான் றகுமத்துல்லாஹ் என்பவர் நிறைய
புத்தகங்கள் சேகரித்து வாசிக்கும் பழக்கம் கொண்டவர்.
அவரது அலமாரியைப் பார்த்தால்
அலங்காரப் பூச்சுகள் இல்லாத காத்திரமான
இலக்கியப் புத்தகங்கள் நிறையவே இருக்கும்.

சிறுவனாக இருந்தபோதே என்னால்
எதைச் சொல்ல முடியும், எப்படிச் சொல்ல முடியும்
என்பதை நான் உணர்ந்து கொள்வதற்கு
அந்தப் புத்தகங்கள் ஆவணங்களாக அமைந்தன.

அதனால் நான் நிறைய வாசித்தேன்.

அது எனக்கு கவிதை எழுதுவதற்கான
ஆர்வத்தைக் கொடுத்தது.

இப்படித்தான் சிறிது சிறிதாக எழுத்து எனக்குள் விளைந்தது.

அப்போதில் இருந்து இப்போதும் நான்
எழுதுவதை நிறுத்தவில்லை.

வாழ்க்கையில் உள்ளார்ந்த ஏதேனும்
அர்த்தங்கள் பிடிபடும்போது
அல்லது அதுசார்ந்த கேள்விகள் எழுப்பப்படும்போது
அவற்றைக் கவிதைகளாக எழுதத்தொடங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமில்லாக் காலம் வந்துவிட்டுப் போகின்ற
உறவுகளை விடவும், எப்பொழுதும் என்னிடமே பேசி,
என்னோடு இருளில் சஞ்சரித்து,
என் அடையாளங்களை நட்டு, என்னை வளர்க்கின்ற
உசிப்பிராணிகளான கவிதைகள் நேசத்துக்குரியவை.

வாழ்க்கை என் கன்னத்தில் அறையும் போதெல்லாம்
விழுந்து விடாமல் நிமிர்ந்து நிற்க
எனது கவிதைகள் உதவுகின்றன.

மனச்சாட்சிக்கு விரோதமாக, ஒன்றைப் பற்றி
பிறர் தாழ்வாகக் கூறும் போது
நான் உயர்த்திக் கூற விரும்புகின்றேன்.

எனது இந்தக் கவிதைப் புத்தகம் வெளிவருவதற்கு
மூச்சு முட்ட அழுத்தம் தந்த
என் ஊனிலும் உணர்விலும் கலந்த என் சகோதரர்

ஈழத்து நவீனத் தமிழின் மிகப் பெருங் கவிஞர்
சோலைக்கிளி அவர்களுக்கும்,

நண்பர் மனுஷ்ய புத்திரன் அவர்களுக்கும்,
உயிர்மை பதிப்பகத்தாருக்கும்,

என் மனம் ஏற்புடையதாகும்;

நீரின் குரலில் ஒளி பாடுவது போல.

**நபீல்**

264 காசீம் வீதி கல்முனை 06
இலங்கை.
குரல் : 071 4914153
E-mail : nafeelum@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகி

நபீல் எனது சகோதரர். நீண்ட நாளாக கவிதை எழுதி வருபவர். ஒரு கவிதை எழுதுபவனும், இன்னொரு கவிதை எழுதுபவனும் ஆளையாள் சகோதரன், சகோதரன் என்று சொல்லிக்கொண்டு நெடுநாளாக உறவாடி வருவதே ஒரு பெரிய சங்கதி. கவிதை உலகத்தில் அபூர்வமாக நடந்துகொண்டிருப்பது.

கவிதையை ஒருவன் எவ்வளவுதான் காதலித்துத் தன் கைக்குள் போட்டுக்கொள்ளப் பார்த்தாலும், கவிதை தனக்கு இஷ்டமானவனின் மடிக்குள்தான் உட்கார்ந்து பால் குடித்து அவன் முகம் பார்த்துக் கொண்டிருக்கும் என்று நான் கூறும் போதெல்லாம் அது சரிதான், அது சரிதான் என்று தலையாட்டிக்கொண்டிருக்கும் இந்த நபீலின் மடிக்குள்ளும் அது அமர்ந்து கைகாட்டிக்கொண்டிருப்பது இப்போது தான் எனக்கும் படுகிறது.

நபீல் தன் வாயால் எதையும் பெரிதாகக்கூறி தன்னை அலட்டிக் கொண்டு பிறர் தன்னை அருவருப்பாகப் பார்க்கச் செய்யத் தெரியாத வர். தன்னடக்கம் என்ற ஒரு வாழைமரத்தின் குருத்துப் பகுதி அவர். கவிதை என்றால் என்ன என்று இன்றுகூட நபீலிடத்தில் கேட்டால், எனக்கு ஒன்றுமே தெரியாது, என்று என்னைப் போலதான் பதில் செல்லக்கூடியவர். நானும் கவிதை என்றால் என்ன என்று யாரும் என்னிடம் கேட்டால் எனக்கு அதைப்பற்றியெல்லாம் தெரியாது.

வேண்டுமென்றால் மிளகாய் நன்றாக விலைகூடிவிட்டது, என் விருப்பத்துக்குரிய பாடகர் காயல் ஷேக் முகம்மது அவர்கள் வபாத்தாகி விட்டார்கள் என்று — தூங்கவிடாமல், சாப்பிடவிடாமல், மனைவி மக்களோடு நள்ளிரவில்கூட படுக்கவிடாமல் தொல்லைப் படுத்துகின்ற ஓர் உணர்வு என்றுதான் பதில் சொல்லி முடிப்பேன்.

இந்தத் தொகுதியை நோக்கினால்: —

நபீலுடைய வெள்ளை மனம் எங்கோவெல்லாம் சென்று இதிலுள்ள மழைகளைப் பெய்திருக்கிறது. எல்லாக் கவிதைகளிலும் நபீல் நம்மைத் தூக்கிப் போட்டு பிரமிப்பை ஏற்படுத்தாது விட்டாலும், நபீல் கவிதை என்ற பெயரால் நொடிப்போடவில்லை. ஒவ்வொரு கவிதை யிலும் அரைவாசிப் பாகத்திலாவது கவித்துவம் பொங்கித் தெரிகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபீலுடைய கவிதைகள் குறைந்தது ஒவ்வொரு ‘மிளகு’ மாதிரியாவது ‘ஆகி’ வந்திருக்கிறது. வாசித்து முடித்ததும்; கடித்தால் உறைப்பும் காரமுமாக இருக்கின்ற ‘மிளகு’களைப்போல வாழுகின்றன. இந்த ‘மிளகு’த் தகுதியாவது ஒரு கவிதைக்கு இருந்தாலே போதும். எங்காவது ஓர் உப்புக் கல்லைக் கடனாக வாங்கியாவது ஒருவன் கவிதையை ரசித்து விடலாம். இந்தத் தன்மைகூட இல்லாமல் சவம்போல கடதாசிகளில் கிடப்பனவல்ல கவிதைகள்.

நபீலுக்கு இந்தத் தகுதி எப்படிக் கைகூடியிருக்கிறது என்று பார்த்தால், அது – அவர் அமைதியாக இருந்து இதுநாள்வரை எழுதிக்கொண்டிருப்பதில் இருந்துதான் முளைத்திருக்கிறது. ஆம்; எழுத்து அமைதியிலும் தியானத்திலும் இருந்து தான் ஊற்றெடுப்பது. ஆர்ப்பாட்டத்திலோ, ஓடித்திரிவதிலோ அல்ல. நபீல் எப்படி இந்த அமைதியை உழைத்தெடுக்கிறாரோ எனக்குத் தெரியவில்லை. நான் நினைக்கிறேன்; மலர்களில் படுக்கிறார் என்று.

**சோலைக்கிளி**

*20.06.2009*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்பொதிவு


| | | |
|---|---|---|
| 1. | மொழி மறந்த நான் | 15 |
| 2. | குருவி | 16 |
| 3. | பாதை வேலிகள் | 17 |
| 4. | முகத்தில் முகம் உதறி | 18 |
| 5. | கூச்சம் | 19 |
| 6. | ஒரு குடம் கண்ணீர் | 20 |
| 7. | ஓங்கரிக்கும் கடல் | 22 |
| 8. | மூத்திரச்சேறு | 23 |
| 9. | எடைபோடுதலும் அளவெடுத்தலும் | 24 |
| 10. | மீன் மாலை | 26 |
| 11. | பனி மூசை | 27 |
| 12. | பச்சை மனம் | 28 |
| 13. | கசியும் திசை | 29 |
| 14, | கடதாசிப் பறவை | 30 |
| 15. | என் வண்ணாத்தி பற்றி | 31 |
| 16. | தும்மல் | 32 |
| 17. | கேள்விப் பழங்கள் | 33 |
| 18. | தெற்குத் திசை | 34 |
| 19. | சிறகுகள் | 35 |
| 20. | தொப்புள்கொடி | 36 |
| 21. | கணையாழி வாழ்க்கை | 37 |
| 22. | ஈடு வைத்த கவிதை | 38 |
| 23. | கடலிறைத்த சொற்கள் | 39 |
| 24. | உயிர்ப்புக் கற்கள் | 40 |
| 25. | அற்புதச் சமன்பாடு | 41 |
| 26. | கழுத்தறுத்தான் வானம் | 42 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. வானமாக நான் 43
28. நீ மீதம் வைத்த பால் 44
29. பனிக்குளிர் 45
30. காலமில்லாக் காலம் 46
31. குறிப்பொன்று 47
32. இரவு வருவதுபோல் 48
33. மூடிய நிர்வாணம் 49
34. புழுதிப் பட்டினம் 51
35. நிலாப்பால் 52
36. புழுங்கல் அரிசி 53
37. குட்டான் பெட்டி 54
38. நகரக் குப்பை 55
39. மரணம் 56
40. வேர்வை 57
41. நீர் விழுது 58
42. வண்டுத் துவாரம் 60
43. அழுக்குச் சட்டை 61
44. வெட்டு முகம் 62
45. கசப்பது ஒரு கவர்ச்சி 63
46. நிலா நடுதல் 64
47. பல்லிப் பா 65
48. தக்காளி மணிகள் 66
49. கூனிப் பெத்தா 68
50. அலையும் சித்திரம் 70
51. மீன் முள் 71
52. சவுக்கு நார் 72
53. மழையின் பிரசங்கம் 73
54. சாலை மரம் 74
55. பித்தம் 75
56. மண் புடவை 76
57. சிறகு உதிர்த்த பகல் 78
58. தூரிகை வர்ணம் 79
59. ஞாபகக் குகை 80
60. படுக்கையிலும் உன் கைகள் விரிந்திருக்கின்றன 81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. வாக்குறுதியளித்த உன் பழைய புன்னகைகள் 83
62. அலைந்து வந்த பாம்பில் மிதித்தவள் 84
63. நரகத்தில் வெந்து கிடக்கும் கைவிரல்கள் 86
64. முணுமுணுத்தபடி நீராடும் அவள் 87
65. தீ மதுவருந்தும் ஓவியம் 88
66. சரியும் முலைகள்மேல் படர்ந்த கூந்தல் 89
67. தெருவில் உரையாடித் திரிந்த காகங்கள் 90
68. கருமுகிலை விழுங்கிய பறவைகள் 91
69. என்னைச் சாய்த்த உன்பெயர் 92
70. மருதாணியில் சிவந்த நகங்கள் 93
71. விருந்தாளிகள் அங்கே காத்திருக்கிறார்கள் 94
72. அலையும் பட்டுக்கடல் 95
73. பூவின் மீது ஏறிவந்த வெறிக்குதிரை 96
74. பேன் ஈரு இருப்பதாய் சுமாரான எதிர்பார்ப்பு 97
75. இதற்குமுன் பார்த்ததே இல்லைநான் 98
76. கடலில் சுழி ஓடும் நம்சந்திப்பு 99
77. காகங்களுமில்லை கறையான்களுமில்லை 100
78. நாம் நினைப்பதுபோல 101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி மறந்த நான்

பொத்தான் இல்லாத சட்டையுடன்
திசை மாறிய வண்ணத்துப் பூச்சியாய்
எதிர்ப்படுவனவற்றில் விழுந்து
தாவிப் பிடிக்க முயன்றும்
முடியாமல்போன பொழுதொன்றில்
வாயைப் பிளந்து நிற்கின்றேன்

ஒளி விரிய விரிய மின்னல்கள்
செல்லறுந்து போவதுபோல்
தள்ளிப் போய் ஒரு மரத்தின் கீழ்
அனாதையாகிக் கத்துகிறேன்
கரைபுரண்டோடுகிறது
நொண்டிச் சில்லாடியதும்
கரையோர நுரைகளுக்கிடையில்
நண்டு பொத்திக் குலாவியதும்

கந்தலைப் புறந்தள்ளி மிக முக்கிமானவனாய்
வெளிர் மஞ்சள் மணல் மீதில்
புராதன வீடு கட்டி சுவர்கள் வரைந்து
கற்குவியல் நட்டு
சிரத்தையுடன் ஓரங்கள் திருத்தி
மார்பளவு நிற்கிறது வெள்ளம்
மெல்ல மெல்ல ஓடியும்
மீண்டும் தொட்டுப் பார்க்க
மார்கழிப் பனிதான் மொழி மறந்த எனக்கு
எத்தனிக்கிறது கால்கள் எங்கோ ஓரிடத்தில்
அறுபட்ட காயம் பின்னிழுக்க

11.03.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவி

பிடித்துப் பார்க்க ஆசைதான் குருவி உன்
ரோமங்கள் ஒவ்வொன்றையும்

பலாப் பிசின்போல் என்னமாய்த்தான்
ஒட்டிக்கொண்டு கத்துகிறாய்
கம்பியில்
பின் பட்டென்று பறக்கின்றாய்

பச்சையம் மிகுந்த என் தோட்டத்தில் பாய்ந்து வந்து
படிக்கின்றாய் அதன் இலைகளை
குச்சிகள் உடைத்துப் பென்சிலாக்கிக் கீறுகிறாய் எதை

விடியத் தீட்டிய உன் குரல் கம்மாதளவு
காலை முடியும்வரை கேட்கிறதே

முகமெங்கும் கறுப்படித்து
குதப்புறத்தில் வெள்ளை குத்தி
பாக்களவு உடல் வளர்த்து
இறக்கை கோதுகிறாய்
உலகத்தோடு உன்னையும் ஒரு வீராங்கனையாக
அர்த்தங்கொள்ளவா பார்க்கிறாய்

04.06.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை வேலிகள்

ஆளரவமற்றது குறுகிய பாதை
நாணற் பூக்களும்
சலசலத்தோடும் ஆறுகளும்
கண்ணுக்கெட்டியவரை தெரிகின்றன
ஏமாற்றத்தின் வீரியம்
இடைவெளியும் தொடருகின்றன
பழகியதுதான் நெருக்கம்
புரிதலில் நிறைந்திருக்கிறது

ஒற்றையடிப் பாதை அலைவரிசைகள்
குறுக்கிட எத்தனிக்காத வலிய காந்தம்போல்
உன் அதிர்வுகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன
தலை குப்புற

மாறிவிட்டது இப்போது வீதியின் பரப்பு
அசுர வெறியுடன் ஓடிய கால்களை
கீழிறக்கும் முயற்சியில் பின்னொடுங்கும்
வேலி தண்டிக்கப்படுகிறது

காலம் வழி நெடுகத் திரும்பவியலாது
சிறிய வீதியெங்கும் மலர்ச்சாலை பெருகி
நடக்க முடியவில்லை
தரையின் கீழ்த்தளம் திறந்துகொள்கிறது
என் கண் முன்னே
இன்னுமொரு பாதை
நீண்டு படுக்க

10.02.2006



2
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்தில் முகம் உதறி

பூமியின் உதடு மா விருட்சமாகி
புயலும் பெருமழையும்
ஆட்டுவிக்கும் ஓர்இரவில் துடிக்கும்
பருவம் விதை விசிறும்
நீ முகத்தில் முகம் உதறி
உறங்க விரைகிறாய்

தலை நீட்டிப்பார் பறவைகள் புணரும்
தளமானதென் முகம்
எழுந்தெழுந்து மீண்டும் விம்மும் நெஞ்சில்
தள்ளாடி வந்தேனும்
ஒரு கவிதை கீறாமல்

இருட்டறை மூலையில்
கரித் துணுக்குகளால்
எதை எழுதுகிறாய்

வராதபோது வருந்தாத
தவமிருப்புகள்
இப்போதெதற்காம்

02.01.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூச்சம்

வழி நெடுகிலும் ஏக்கப் பெருமூச்செறிந்து
நகர் வலம் வரும் ஒரு பௌர்ணமி நிலவு

நட்சத்திரங்களின் பிரமிப்புகளை உள்வாங்கி
விக்கினம் அவிழ்க்கும் ஓர் அந்திச் சூரியன்

தூரத்தை நெருடலுடன் கடந்து
எதிரே விரிந்து கிடக்கும் அந்த வங்கக் கடல்

உள்ளிழுத்துத் துப்பிய கனவுகளை
நூலிழையில் முடிவதாக எண்ணி
பலநேரங்களில் கறுத்துப்போகும் ஒரு முகம்
கூசுகிறது என் ஆன்மா

பெறுவதும் இழப்பதுமான
ஒப்பனை வாழ்வில்
சக நண்பனைப் பார்த்து
எழு என்று சொல்ல

24.10.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடம் கண்ணீர்

உயிர்ச்சாக்கின் பின்னலிழை விலகுகின்றன
ஒரு கவிஞன் தேடிக் கொண்டிருந்த பரப்பு
நிச்சயப்பட்டாயிற்று

என்னைக் கடக்கும் நண்பர்களே மனந்திரும்புங்கள்
அடுத்த முறை நாம் சந்திக்கும்போது
வருத்தத்துடன் விடைபெற
எமது புதிய கண்டு பிடிப்பு உதவலாம்

இதுவரை மது உறிஞ்சியதில்லை
யாசிக்க வேண்டுமென்ற நிலை இருந்தும்
பிச்சைக்காரனைப்போல் காட்டியது இல்லை

என்னுடைய அறையில் ஒரு புத்தகப் பரப்புண்டு
எவருக்கும் தொல்லை ஏற்படாதபடி
ரகசியமாய் அழுத கண்ணீர்
ஒரு குடம் வழிகிறது

வீடு தேடி வரும் எதற்கும்
கடமைப்பட்டிருக்கிறேன் எளிதில்
நிறைவடைகிறவனால்
ஒன்றுமேயில்லை என்ற முனகலோடு
இருளுக்குள் கூர்ந்து
ஒளிந்து கொள்கிறேன்

வெற்றுக்கை உதறி
இறுதி வார்த்தை விழுந்த கட்டிலை விட்டு
தொய்ந்த இலைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் மரக் கிளையில் ஒரு கவிதை
அழைப்பிற்குக் காத்திருக்கிறது
எழுதப்போகிறேன்

20.06.1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓங்கரிக்கும் கடல்

நீயெறிந்த விதைகள்
பசியுறைந்த பூமியில்
தரித்திருக்கின்றன

கிழிந்ததாய்த் தோன்றும் வானம்
அறிகுறிகளேதுமின்றி விடிகிறது

இவ்விரவில் கவியும்
எந்தன் வலி உன்னிலும்
மெல்லப் பரவத் தொடங்கும்

கன்னமேட்டில் பொசுங்கி விளைந்த
கருமைப் புள்ளிகள்
சருகுகளாக உடைந்திடக் கூடும்

காலாவதியாகிப்போன
முத்தமொன்றின் சிணுங்கல் கேட்கிறதா உனக்கு
வேட்டைகளுக்குப் பின் காற்றுப்போன கனவுகள்
தொடுகிறதா உன்னை

உன் நிராகரிப்பின் வடுக்கள் செரிக்காமலா
ஓங்கரிக்கிறது கடல்

10.03.1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்திரச் சேறு

கடைசியில் மார்பிலுறையும் உன் சிரசு

என்னைப் போலவே
தேற்றுதல் தோற்று
உதறியெறிந்திடும்
முத்தங்களின் ஈரங்களை
உலர்த்த நினையாதே
ஆயுளில் மிஞ்சும் தழும்புகளில்
ரசம் இருப்பதாய் நீ
எண்ணுவதும் மடமை

சிலைகள் துயில சிற்பிகள்
உயிர் வாழவில்லையா

சிதைவுகளின் கிடங்குகளில்
தடயங்கள்தேடும் கையில்
கனக்கிறது மூத்திரச் சேறு

அனுமதி அறுக்கப்பட்ட
தடுமாறும் அடிமரத்தில்
எச்சிலமிலத்தால் தீ மூட்டாதே
அது உயிர்ப்பேன்
என் கடைசி இலையும் என்கிறது

புறக்கணிப்பின் துக்கம்
வலியை உமிழ்கிறது
உறுதியாகிவிட்டால் மரணம்
வலியற்றது கண்ணே

20.07.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடைபோடுதலும் அளவெடுத்தலும்

உன் பார்வையில் தென்றலாகி
தவழ்ந்து கிடக்கவே விரும்புகிறேன்

உன் தீண்டல்களில் குளிர் காய்ந்து
எஞ்சிய இளமையின் வடுக்களை
காலம் இதழ் மூடி விடை கொடுக்கிறது

எனக்குச் சொந்தமானவை எவையும்
என்னிடத்தில் இல்லை எதுவானாலும்
முடிவெடுக்க வேண்டியன் நீ

நிறத்தையறிந்தேன்
மணத்தை நுகர்ந்தேன்
பூக்களின் நிலை என்னவென நானறியேன்

கோட்டுக்குள் சுற்றும் பூமியில்
சற்றே முகர்ந்துவரத் தோன்றும் பொழுதுகளில்
எல்லாம் அழகாகத்தான் தெரிகின்றன
புருவம் நெரித்து
உற்று நோக்கி நிதானமாக அசைபோட
உன் ஆதர்ஷனம் தொனிக்கிறது

கற்குவியல்களை
நகர்த்திவிட்டு எத்தனிக்கும் கால்கள்
உள்ளேயிருக்கும் நத்தையின்
வாழ்வு பற்றிப் புரியாமல்
பொருள்வயப்பட்டுப்போன பிரபஞ்சத்தில்
நிஜம் உணரும் ஆத்மாக்கள் சில நேரங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைப்புக்கும் நெளிவுக்கும் ஆளாகி
இயலாமையில் மனது துவள
உன்னிடம் கையேந்துகின்றன

எடை போடுதலும்
அளவெடுத்தலுமாய் நகரும் வாழ்வை
ஒட்டவைக்க முயன்று அற்ப மகிழ்ச்சியில்
உன்னை மறக்கும் உபரிகள்
பிறருக்கென்று தியாகம் செய்வதாய்
வழிநெடுகிலும் பேசும்

18.04.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் மாலை

மீன் மாலை கையில் தொங்க
செம்படவன் போகிறான்

கவிழ்ந்து கிடக்கும்
கொப்பறத் தோணிமேல்
சிறுவர்கள் ஏறி ஓட்டி விளையாடல்
காகங்கள் கைவிறைத்துப் பறத்தல் தெரிகிறது

பருவ முதிர்ச்சியடைந்த கடல்
கரைக் கன்னியின் இதழ்கள் கிள்ளும்
ஓர் அந்தி மாலை

மகளோடு நான்
சிப்பிகள் தேடிக் குனிகிறேன்
பொட்டு ஆனைச் செவியன்
சிறுநத்தை என்று குவிக்கிறாள்

பன்னாடை காற்றில் அவிழ்கிறது
ஓலை ஒன்று மரம் கட்டி வழுக்க

இரா தூக்கக் கண்ணோடு தள்ளாட
நிலவு வடித்த வீணியின் சொட்டு
படுக்கையில் விழுந்து
ஈரம் இன்னும் பிசுபிசுக்கிறது

16.09.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனி மூசை

எண்ணெய் விசிறியும் பனி மூசை அடிக்கிறது
தத்தி தத்தியாய் பெண்டுகள்
கைபோட்டுப் புல் எடுத்த வேளாண்மை
காட்டுக் குருவி காடை கண்ணில் படாமல்
தொட்டுச் செய்த வயல்

குலுங்கி மார்பாடும் கொண்டையில் நசல் வந்து
உடல் வெளிறிக் குனிந்த எனது குமர்
நிமிரவே இல்லை இன்னும்

துயில் கொள்ளும் பொழுதொன்றில்
முறுகமாகுதல் மேய்ந்திருந்தால்
மனம் ஆறும்
பயந்த சீவன் என் பச்சை வயல் நாவறண்டு
காய்ச்சலெடுக்கும் தருவாயில்
சந்தனம் குழைத்து
வெயில் பூசிக் கனக்கின்ற சூட்டிலும்
நெளிகிறதே புழு

தயிர்ச் சட்டி போலிருந்த
வயலில்தான் நெல்லெறிந்தோம்
மூன்றரை மாதந்தான்
கெட்ட கேட்டுக்குக் காவல் பரண் வேறு
பாட்டம் பாட்டமாய்க் கிளி வந்து கொத்த
அங்கேது குடலை

18.08.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை மனம்

சட்டியில் போட்டு வறுக்கிறாய்
முறுகுவதாய் இல்லை மனது

ஓடு காய்ந்து அகப்பை தேய்ந்து
இறக்கிய தருவாயிலும் பச்சை இருக்கிறது

தேங்காய்போல துருவியும் பார்த்தாய்
முடியவில்லை
அரிசியைப்போல உலையிலும் இட்டாய்
வேகவில்லை

உருளைக் கிழங்குபோல் வெட்டவும்
இலைக்கறிபோல அரியவும்
இயலவில்லை இயலவில்லை

ஒரு முறை உரலிலிட்டு இடித்த போதும்
உடையாத என் மனதை

03.10.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசியும் தசை

இலைகள் உதிர்வதில்லை
இடும் முத்தங்களால்
உன் மறுகுதல்களால்
என் மனம் ஒருபோதும் உடைவதில்லை
முற்றுப்புள்ளியிலிருந்து தொடங்கும்
என் பிடிமானத்தை
திருப்பிப் பார்க்காமலிருப்பதுதான் உன் குற்றம்
தட்டிக் கொண்டே இருக்கிறது தொண்டைவரை
இந்த வழிப்போக்கனுடைய பிரார்த்திப்பு
ஒவ்வொரு முறையும்
எவ்வளவு வருந்தினாய்
இல்லாததைக் கேட்பவர்க்கு
அனுதாபப்பட்டு ஒப்படைக்கின்றாய்
நான் புரிந்து கொள்ளும் மட்டும்
கொஞ்சம் அவகாசம் கொடுக்காமல்
பெருமூச்சுகளிலிருந்து
இப்பொழுதும் அசைந்து காயங்களாகி
கசியும் தசைகளை வேறு யாரோ
அரிந்து கொண்டிருப்பதுபோல் வலிக்கிறது

06.02.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசிப் பறவை

தேர்ந்தெடுத்த நீர் நிலைகளில்
அகழ்தல்போல்
தொண்டைக்குள் கை நுழைத்து
உள்ள கொஞ்சம் நீரை
அள்ளி எடுக்கின்றாய்
உறுப்புக்கள் ஒவ்வொன்றாய்த் தடவி
என்னில் சித்திரங்கள் தேடுகின்றாய்

கன்னிச் சுவாலை மீதிற் சுழன்றாடுவது
துடிப்பது நெருப்பு வளையம் சூடுவது
புண்கள் தனியத் தடவுவது
உன் நஞ்சற்ற பரிசாரமா

தோளமர்ந்து விழும் சிரசு முடியில்
கனத்த வலை கட்டி
சிலந்தி நெய்த ஒற்றை இழைபோல்
பாசாங்கு செய்கின்றாய்
கொடி அறுந்து மண்ணில் விழுந்த
என் மேலாடை மீது ஏறி நடக்கின்றாய்

வெளிச்சமணைந்து விடிந்த உலகமாய்
முதுகொடிந்து பொறுக்கிய
என் கடதாசிக் கட்டுகளை
பறவைகளாக மாற்றி விடுகின்றாய்

சற்றுமுன் என் கதவைச் சாத்திய புயலே

09.04.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் வண்ணாத்தி பற்றி

பூத்தலை முன் நிறுத்தி என் மீதமர்ந்து
உன் மொழியில் பேசுகிறாய்

குளிர் பனியிடையில் சுற்றி வருகிறாய்
தேன்கட்டி வதைபெருத்த சிலபூக்கள்
நோக்காடோடு காத்திருக்க

வலை நெய்யும் கிராமத்து முகில்கள்
குசு குசு சொல்லிச் சிரிக்க
என் வண்ணாத்தி நீ விரிந்து பறக்கிறாய்

ஆசை வருகிறது
திசை மாறிய உனது சமன்பாடுகளை
மீண்டும் ஒரு முறை தொட்டுப் பார்க்க

மறுபடி மறுபடியும்
உன் சரீரக் கதகதப்பு
என் கண்ணை வெட்டுகிறது
வைகறையில் உன் சித்திரம் புலர
என் மனது சிலிர்த்தெழுகிறது
எங்கோ ஓரிடத்தில் பூ மீறுகிறது

05.12.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தும்மல்

அடுப்படியின் அறையாக
பெரும்பாலும் என்மனது
உலை வைத்த இடங்களில்
புகையாகிப் படர்ந்திருக்கிறது ஒட்டறை
சுவரெங்கும் படிந்திருக்கிறது எண்ணெய்ப்பசை

அடுக்களை வாசம்
இயன்றவரை எனைநோக்கி வசியம் செய்துவிட
அகலாதிருக்கின்றேன்

உருண்டையாய்
துருத்திக் கொண்டிருக்கிறது
கோதுமை மா
ஆளுக்கொன்றாய் தின்றும்
பலகாரம் தொண்டையில் செருகி
புரையேறி நிற்கிறது
தப்பிக்கத் திசையில்லாமல்
ஆடைகளில் பிடிக்கிறது கரி
திரும்பி வந்துவிட்டேன் என்கிறது
தும்மல்

07.04.1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விப் பழங்கள்

மண்குடத்தில் நீரெடுத்து
பழஞ்சோறு கரைத்து
காலை கொணரும் சூட்டில் பருக
காரணம் கேட்டாள் மகள்
வயிற்றின் ரணம் ஆற்றும் வல்லமை கொண்டதுதான்
எரியும் நெஞ்சின் வலி போக்கும்
அரியப்படவிருக்கும் காய்கறி பற்றியும்
கேள்விகள் எறிகிறாள்
மழை நீரில் முளைவிடும் தானியக் குதிர்கள்
மரமொன்று பூத்தல் குறித்தும்

உற்சாகத்தில்
பொத்திப் பொத்தி மோப்பம் பிடிக்கும்
மனமுள்தான் நுழைகின்றன கரங்கள்
அப்புறப்படுத்தவே முடியாத வினாக்களால்
நிமிர்கின்றன மயிர்கள்

வெங்காயம் முறிக்கையில்
முதிர்ந்த பட்டைகள் துருத்திக் கொண்டிருக்க
ஒரு கிராமத் தாகமுடன்
மூச்சு முட்ட ஓடி வருகின்றாள்
வசவுகளில் கொட்டுண்டு கிடந்தன
கேள்விப் பழங்கள்

24.07.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குத் திசை

உபாயங்களுக்குள் கிடுகிடுத்தோடும்
உயிர் நீர் அருவியே வந்து நில்
சிறுமணல் தடுப்புகளையெல்லாம் உடைத்து விடு
கண்ணீர் கட்டி உப்பு மூட்டையாய்ப்போன
கோழைச் சுவர்களே கரைந்தோடுக

நீரிலலையும் அல்லி மலர்கள்
சிற்றலைகளில் புரண்டு விளையாடும்
படலங்களே விரிக
தென்திசையில் உடல் வளைந்து
பாம்புபோல் எழுக

மிகப்பல அடையாளமாய் விரையும் மேகமே
கைநிறைய பூக்களோடு
ஒரு பச்சைக்கம்பளம் விரி
முத்தமிட்டுக் கொண்டார்களா காதலர்கள்

12.01.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகுகள்

எனது சிறகுகள் வசீகரமானவை
வண்ணத்துப் பூச்சியின் நிறங்களை விடவும்
செங்கால் நாரையின் சொண்டினை மிக்கவும்
குபீரென அடிக்கும் கவர்ச்சி மிக்கவை

நிலாவை உருக்கி வடித்த எண்ணெய்யில்
ஊறப் போட்டவை எனது சிறகுகள்

மலர்ந்த பூக்களை மேலே அடுக்கி
எரிக்கும் வெயிலுக்குள்
அசைத்துச் செல்கிறேன்

தெருக் குருவிகளின் சிறகுகள்போல
மின்சாரக் கம்பிகளில் பட்டு
காற்றில் ஒட்டுண்டு சிதறும்
கோடிச் சிறகுகள் போலல்ல
என் சிறகு

நரம்புகள் வேர்க்கும் அச்சங்கள் நிலவும்
அண்டவெளியிலும் விரிக்கின்றேன்
மண் குடித்து மலர்ந்த சிறகுகள்

27.05.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொப்புள் கொடி

நிலவு காந்துகின்ற ஒற்றைப் பனைக்குள்
மறுக்கிறது வெள்ளி
குதித்தோடும் காற்றின் செவி முறுக்கி
நில்லென்று சொல்லும் ஒரு வம்மியின் கீழ்
நான் மட்டும் தனியனாய்

வெளவால் கக்கிய இரணம்
காலுக்கடியில் சளுக்கிறது
நரிகளின் ஊளை
நாயின் கத்தல் எதுவும் கேட்காதவெளி

செம்மஞ்சள் நிறத்தில் புத்துக்கோபுரங்கள்
மசண்டையான போதும்
ஒரு பாம்பு கூட நடமாட்டம் இல்லை

சிறகுகள் சிலிப்பிக் காயவைத்த குருவியின்
கூட்டுக்குள் கொஞ்சம் சரசரப்பும் கிடையாது

துண்டிக்கப்படாத தொப்புள் கொடிகளாய்
ஆலையின் விழுதுகள்

24.08.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணையாழி வாழ்க்கை

மழை முகில்
என் தகரக் கூரையில்தன் அதைக் கொட்டிற்று

மழலை ஒன்றின் கதறல்
கிழவி ஒருத்தியின் கோபம்
எல்லாம் சேர்ந்ததா அந்தப் பெருமழை

கோடை மழை இதுவா
கொட்டும் வெயிலில் கன்னங்கள் வெந்து
ஊசித் துவாரம் வழி மூச்சோடி விறைக்கிறது

ஓடு பாதையில் சுற்றிச் சுழன்று நீர்
பனையோலைப் பெட்டியொன்றை
முதுகில் சுமக்கிறது

கட்டு மரம் மிதக்கிறது
கொளுக்கிப் புழுவின் தோரணங்கள் அழிய
மூடுபனிப் பெருநாள் மீண்டும்

மறவாதிருக்க
மாஞ்சோலை பூப்பூத்து
தோல் உரித்துப் பசைதள்ளி ஈரம் கசிய
என் ஆடைகளெங்கும்
கரும்புள்ளி செம்புள்ளி
காலச் சித்திரம் அணிவித்த
கணையாழி வாழ்க்கை

23.01.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு வைத்த கவிதை

உன் விரல் பற்றிய போர் தொடங்கியதிலிருந்து
எனக்குள் மல்லிகை பூப்பதில்லை
செவ்விரத்தை இதழ் விரித்து
முன்னே வந்து நிற்பதில்லை
துப்பிய உமிழ் நீரின் குமிழி வெடிப்பதுபோல்
ஞாபகம் இல்லாமல் அழிகிறது தீட்டுப் படாமலே
பறக்கிறது என் புறா
நீ நன்றாயிருக்கிறாய் என்று அறிவது கடினம்
இந்த மண்ணுக்கு நாவூறு பண்ணியது
யாரென்று தெரியவில்லை
கரி பூசிய முகத்துடன் முழிக்கிறது அதிகாலை
முறுக்கிய மீசையும் விரிந்த தொப்பியும்
கட்டைப் பொல்லுமாய் திரிந்தவர்கள் மாறி
கொழுப்புக் கூடி நவீன இரத்தக் குழாய் பொருத்தி
வெளியில் வருகிறார்கள்
எனது கவிதையை ஈடு வைத்து
நீண்ட இரைச்சலுடன் நகர் வலம் வரும்
குரூரம் நடக்கிறது
நினைவின் அலைகள்
அழுகை சிரிப்புமாய் காற்றில் மிதக்க
இப்பொழுதாவது
உன் இருப்பின் வாய்
இனியது பேசுமா

11.10.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலிறைத்த சொற்கள்

எனக்கு இஷ்டமில்லாமல் தொட்டதில்லை உன்னை
வெள்ளை மேனிதான்
கறுப்புப் புள்ளி
கோடு போட்ட புடவை வேறு

பகலில் சிரித்து
இரவுகளில் உன்னோடு உறவாடி அழுதிருக்கிறேன்
நேற்று முழுசாய் பப்லோ நெருடாவை
குறித்தே பேசினாய்

சேரனைப் பற்றியும்
ஒரு நூறு கவிதைகள் சொல்லியிருக்கிறாய்
முதலில் நம் சோலைக்கிளி
காகம் கலைத்த கனவுகளில் வந்து போனார்

பட்டு மேனி கடலிறைத்த சொற்கள்
காற்றடைந்து அந்தரத்தில் மிதக்கின்றேன்
இன்னும் உமா அண்ணனோடு
உள்மன யாத்திரைபோல்
ஒரு தினம்
தாத்தாமாரும் பேரர்களும் பசித்திருக்க
பலஸ்தீனம் பற்றி நுஃமானோடு பேச விட்டாய்
பொழுதுகள் கழிவதும்
கழுத்து வலிக்க கண்கள் விரிவதும்
உன்னால்தான் கண்ணே

24.03.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்புக் கற்கள்

சுருட்டிப் பிழிந்து வெளியில் எறிகின்றேன்
என் வழிக் குறிப்புகளை
ததும்பும் கடல் பறவை
அதன் அலகில் துலங்கிற்று
ஈரத் துயர்கசிந்த என்பாடல்

என் அறையின் சுருதி
இன்றிரவே உதிர்ந்துபோன கதை
பறவை நீ அறிந்திருக்க நியாயமில்லை
முகம் முளைத்து இடம் மறந்து
மொழி வானத்தில்
உனக்கும் எனக்குமான உயிர்ப்புக் கற்கள்
ஒவ்வொன்றாய் உரசிப் பார்த்து
வெளியில் வீசுகின்றேன்

வானத்தில் இல்லை
இரை கொத்தும் தவிப்பு
மிரட்டித் துரத்தும் தீரம்
கண்களுக்கு மட்டும்தான்

06.05.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதச் சமன்பாடு

ஒரு நாற்சந்தியில்
சிற்றோடைபோல் திரும்புகின்றேன்
மைனாக்கள் கரைந்துருகும் புங்கை மரநிழலில்
படுக்கையும்
ஒரு சோடிக் குழந்தையுமாய்
பூலோகத்தாய் சிதறும் பனியிடையில்
பொய்த்துக் கிடக்கின்றாள்

என் கனவு பலித்திற்று
வலை வீசிக் காத்திருக்கும் வழி நெடுகிலும்
துளிர்ப்பதற்கும் மரங்களில்லை
பொய்யாகச் சிரித்துப் பேசி
இதுபோல இன்னும் அந்தி கழிந்து போகலாம்

அற்புதம் நிகழ்த்துமென்ற சமன்பாட்டோடு
எதிரே விரிந்து கிடக்கும் கற்குவியலில்
அமர்ந்து கொள்கிறேன்
யாரோ ஒரு மனிதனின்
சிலவ்ற்றில் பரிமாறும் சரீரக் கதகதப்பில்
பின் வாங்குகிறது அதிகாலை

எங்கோ ஞாபகமற்று விசிறிப் பின்னிழுத்த
கம்பளிப் போர்வைக்குள்
எஞ்சிய இளமையின் வடுக்கள்
எனக்குத் தெரிந்த நீயும் புட்டிப் பாலோடு
விரல் சூப்பித் திரிகின்றாய்

11.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழுத்தறுத்தான் வானம்

நட்சத்திரங்கள்
மணச் சவர்க்காரம் தேய்த்துக் குளித்திருக்க வேண்டும்

நல்ல பிரகாசம் வாசம்
நேற்றைய இரவு

பாரசீகப் பன்னீர் ரோஜா
என் காதலியின் முன்றிலில் வந்து முளைத்திருப்பதாக
சூரிய காந்திப்பூ மனதுக்குள் முணுமுணுத்தபடி
முகத்தைத் திருப்பியது

இடையில்
கத்தரிப் பூவின் நிறமாக
கழுத்தறுத்தான் வானம்

11.10.1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானமாக நான்

முள்ளேற முள்ளேறக் குதிகாலால் நடந்தது வானம்
மெருதுவான முயல்களும்
அழகான ஆடுகளும்
உலகவலம் வந்தன மேகங்களாகி
வானம் இப்போது இறங்கியது
நிலவைத் தொட்ட வானம்
ஒவ்வொரு அறையாக உள்ளே சென்று
நிலவின் குளியல் அறையுள் புகுந்து குளித்து
நிலவின் படுக்கை அறையில் ஆடை மாற்றி
ஒரு முறை முகம் பார்த்துக் கொண்டது
பூமியில்

நான் எழுதியபடி
இரண்டு சமாந்தர நரம்புகளுக்குள்ளே
மேலும் கீழுமாய் ஓடும் குருதியின்
அளவில் மாற்றம் நிகழ்ந்தது ஏன் என்று

இன்னும் ஒரு படி குனிந்தது வானம்
கடலைக் குடித்துத் தாகம் தீர்த்து
உடுவை ஆய்ந்து வாய்க்குள் போட்டது
என்மேல் இரக்கம் ஒரு தும்பிக்கு வந்தது
தனது வாலில் எனது முடியை
பிணைத்து மெல்லச் சிறகை அசைத்தது

காகங்கள் கரையவில்லை

பருந்துகள் பறக்கவில்லை
வானம் இருந்த இடத்தில்
நான்

14.07.1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ மீதம் வைத்த பால்

நான் மறப்பேனா
நாம் விழிக்கும் வரைக்கும் காற்று
உறங்காமல் வீசியதை

சிறுசிறு இடியுடன் பெய்த மழையில்
சுருங்கிய எனது சிற்றூரில்
நீமட்டும் தனியனாய் அழுவதைப் பொறுப்பேனா

அரைமணி நேரம் எழுதும்
அரசபணிபோல் இறுகிப்போய்
தலைவிறைத்து அண்ணாந்து ஒரு நொடியில்
கண்பிதுங்கிக் கரைகின்ற உன் கோலம்
ஆழத்திரைவரையில்
கம்பிக் கூர் முனையால் வருடியதை மறப்பேனா

படுக்கை தளர்வுற விம்மும் உன் பூ மேனி காய
பக்கம் வளைந்து வந்து அணைத்தெடுக்கும் ஆற்றல்
இந்த மரத்துக்கு இல்லைதான்

புலவர்கள் ஏதோ பேசுவது கேட்க
நீ மீதம் வைத்த பால் நினைவுக்கு வரும்
உள்ளும் புறமும் ஒரு காலத்தில்
அழகாய்த் தெரிந்ததுபோல்
இன்றில்லை என்று ஏங்குவதை மன்னியேன்

நம்பு
வானத்தில் நீ நின்று
என் ஊரெல்லாம் நீர்க் கசிவு

03.02.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனிக்குளிர்

மெழுகாக நான் உருகி கொஞ்சம் அழவிடு
உன்னைப்போல

என்னை உனது நினைவுச் சிற்றெறும்புகள்
இழுத்துச் செல்வதற்கென்றே
நீ கீறிய பாதைகளை அழித்துவிட முடியவில்லை

உனக்காகவும் எனக்காகவும்
இரங்க மறுத்த அந்த இரவில்தான்
நிச்சயப்படுத்தப்படாத மழை பெய்யத் துவங்கியது

ஓர் ஊமை கண்டெடுத்த புதையலைப்போல
என் உள்ளுணர்வுகளை
உன்னிடத்தில் நான் உரைக்க முடியாமல்
பதறியதை நீ அறிவாயா

காட்டு ரோசா
கொடி மல்லிகை
செவ்வரத்தைபோல
நான் உன் பெயர்கொண்ட மரமாகி
ஒவ்வொரு பனிக்காலையிலும் பூத்துக் கொட்டுகிறேன்

உன் சிரசுத் தென்னையில் காய்த்த
என் கனவுத் தேங்காய்களைப் பறித்துவிடு

எண்ணெய் ஊற்றலாம்

10.08.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலமில்லாக் காலம்

நிலவு மாதுளம் பழம்போல தெரிகிறது என்று
அண்ணாந்து பார்த்தது ஓர் அணில்

கொச்சிக்காயைக் கடித்தது மாதிரி
காற்று தன் நாவை
என் ரோமத்தில் தேய்த்தது

தொட்டாற் சுருங்கியைப்போல்
அவளுடைய அகலமான நினைவுகள்
எனக்குள் மொத்தமாகி முளை விட்டன

பனியென்டாப் பனிதான்
பார்ப்போம் ஒரு கையென்று
வண்டுத் தாத்தா தன் சிநேகிதனோடு
கடற்கரைப் பக்கமாய்ப் போனார்

அலறி மரங்களுக்குள்
அலாதியாய் இருந்து கொண்டு
வெளவால்கள் கண்பிதுக்கின
வேளா மீனும் வெண்ணெய்ச் சுறாவும்
என் தூண்டிலில் பட்டு நழுவியதென்று
ஒரு மீனவன் கூவினான்

காலமில்லாக் காலம்
எச்சிலைத் துப்பிவிட்டு
என் தலைமேல் பறந்தது ஒரு கொக்கு
வெற்றிலை போடப் பழகியிருக்கும்

07.03.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பொன்று

உன் இடை உரசி
எழுதிய இசைக் குறிப்பொன்று
நரம்பு வழி புகுந்து அலைவுறுகிறது

நிசப்தம் பூத்த இரவின் பிரசங்கம் கேட்கிறது
மரணத்தின் ஓலம் யுகங்களின் மீது
சித்திரம் வரைகிறது

நதிகளும்
என்னை எதிர்கொள்ளும் காற்றும்
நிபந்தனையற்ற உதவிக்கு வருவதாய் இல்லை

அசைவுகளற்ற மரங்கள்
கல்லெறிந்தும்
தளம்பாத கிணறுகள் எல்லாமே
என்னை நடுங்கச் செய்வன

என் மீது ஏதோ
மோதத் திரும்புகின்றன

08.04.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு வருவதுபோல்

ஒரு தளிர் விரல்
நிலவின் குளிர்த் தீண்டலில்
சிலிர்த்துக் கிடக்கிறது

பசியாறிக் கொள்கிறது
சிறு குமிழ் உடைந்து ஒரு சிறு தாமரை

இயற்கை தன்னழகை
தனியறையில் உலர்த்தி எறிகிறது

உன் வளையல்கள் ஓசையெழுப்ப
கொதிமணலில் என் பாதம்
மொழிவரை புதைகிறது

நீ வருகிறாய்
என் எண்ணங்களாக
எப்போதாவது ஓர் இரவில்
எனக்கு இரவு வருவதுபோல்

17.06.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடிய நிர்வாணம்

மலை முகடு தடவிக் கடக்கிறது நிலவு
நட்சத்திரம் ஆய நெடுக்கின்றன மரங்கள்
தப்பி ஓடிவரும் வெருண்ட முயல்களாய்
மேகங்கள் உடுத்துக் கொண்டு
ஒழுங்காக விரிந்து கிடக்கிறது வானம்

கை அகட்டிக் குதிக்கிறது காகம்
வால் பூட்டி பலவண்ண
சட்டை அணிந்து மிதக்கிறது காற்றாடி

இராணுவ வீரர்களை நிகர்த்த
அணிவகுப்பில் புறாக்கள் நகர்கின்றன
அட்டவணைப்படியே ஆலா வட்டமடிக்கிறது
பகலை உரிக்கிறது இரவு
இரவை உரிக்கிறது பகல்

சோப்புக் கட்டியாக மாறி
தேய்த்துக் கழுவுகிறது கடல்
திரைச்சேலை கட்டிய அந்தப்புரத்தில்
கூந்தல் உலர்த்த உதவுகிறது காற்று

மங்கித் தேய்ந்து மறைந்த ஓர் மூலையில்
மாறிமாறித் தரிக்கிறது மின்னல்
தூய நீர்க் குட்டை வந்து விழுகிறது

குளிரகற்றியதற்கு நன்றி சொல்கிறது
ஒரு வானம் பாடி சூரியன் சிரிக்கிறான்
ஒரு குவளை கவிழ்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்தாடையுடன் நிற்பவளே விலகிப் போ
ஆகாயத்தில் திறந்த காட்சி அற்புதம்

பூமியில் நீ மூடியதெல்லாம் நிர்வாணம்

14.07.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புழுதிப் பட்டினம்

நீண்டு நீண்டு உறைய மறுக்கிறது வெயில் நீர்
ஒரு மாறுதலுக்காக அவளுடைய முகத்தில்
சில துளிநீர் தெளித்தேன்
தீப்பொறியாய் அவ்விடம் சுருங்கி
கறுப்பாய் ஏதோ வெளியில் தள்ளிற்று

வழமைக்கு மாறாக எதுவுமில்லை
எந்நாளும் இப்படித்தான்
பொழுதின் மீது உயிர் கட்டிக் கிடக்கிறது
சுற்றுச் சூழல் பெண்ணை முத்தமிடும்போது
மென்மையாய்த் துடிக்கும் செவ்விதழில்
புழுதி படிந்து துலங்கிற்று

பின்வாங்குவது மடமைதான்
பட்டினம் சுடர்விட்ட கூர்மைத் தீ கண்டு

ஊரில் அவ்வாறில்லை
குப்புற விழுந்தாலும்
ஆழத்துள் அமிழ்ந்தாலும்
மரக்கிளை முறிந்து வந்து தாலாட்டும்
புகாரைக் கொசுவி ஒரு தாய் வீடு செய்யும்

06.05.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாப்பால்

உதிர்ந்து மணக்கிறது வம்மிப் பூ
அதிகாலை உன் வேலிக் கிடுகுக்குள்ளே
என் பாதம் உலாவும் சேதி தெரிகிறது

மண் கவ்வி ஓய்ந்த உன் மூச்சுக் காற்றினிலே
என் தேகம் ஒரு துரும்பில்
தூக்கணாங் குருவிக் குடிலாகி அசைகிறது

சூளைக்குள் தள்ளிய என் நெஞ்சை
வெந்த பாணாய் வெளியில் கொண்டோட
யாருமில்லை குயிலே

கடலாடி வற்றி நெடுநாள்
களி மண்ணால் நான் செய்த சட்டி பானையெல்லாம்
நிலாப்பாலில் தயிர் செய்த முட்டியுடன் உருண்டு
வாழைநார் உறியும் அந்துகிடக்கிறது

கூனி பிடித்த அத்தாங்கு மண்ணடியில்
மானம் மட்டும் மீதமுமாய் நீயிருந்தாய்
கூந்தலுக்குள்ளே இருட்டி மழை பெய்த
மேகம் கடலோடு புரண்டு படுக்கிறது

காகச் சொண்டிடுக்கில் மீனாகி
மரப் பொந்தில் குதறிக் கிழிக்கின்ற
முக்கல் பாரமுடன் குந்திக் கழிக்கிறது காலம்

01.03.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புழுங்கல் அரிசி

உலையில் கிடந்து வேகிறது
புழுங்கல் அரிசி
வாப்பாவின் பசி அடங்கலாக

மூக்குத் திளைக்கிறது
அடிச்சோறு பற்றி சலசலத்துறையும்
சோற்று நீர் கும்பி வழிதலிலும் மணமிருக்கும்
களனி நீர் குடித்தல்
நிகழ்வில் கிடைக்கின்ற தவங்களிலொன்று

அரிசி· அரிக்கும் சத்தத்தில்
தாவித்திரிகிறது காகம்
காற்றுப் புகுந்து
தீ சரிந்து துளிர்க்கிறது

சிரட்டை எரிந்து வெடிக்கின்ற போதில்
இசைக் குறிப்பெடுப்பீர்
கூடவே ஓலையும் நனைய

24.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டான் பெட்டி

உன் மோதிர விரல்கள் வலியெடுத்தபோது
ஒவ்வொன்றாய் விழுந்தன குட்டான் உமல்கள்

உள்ளறையில் ஓவியமாய் உருவாக்கி
வெளியறையில் சரக்குப் பெட்டிகளாய்
விற்பனை செய்கின்றாய்

சில உன் கண்களைப்போல
சற்றுப் பெரியன
அறை முழுவதும் பனை ஓலைத்தார்வைகள்

ஓலை வாசம் உணர்ச்சி மிக்கது
சின்னச் சின்னப் பின்னல்
உன் விரல்களின் நர்த்தனத்தில்
பிறக்கின்ற நாதத்துள் இத்தனை இனிப்பா

அம்புக்குறிகள் வார்ந்தெடுத்த
கீறுகளா இந்தச் சித்திரங்கள்

குட்டான் கடிப்பில் தேநீர் இறங்கும்
கசப்பின் வசீகரி விரல்த்தறிகளின் கூடுகள்
உன் முதுகுக்குப் பின்னால் குவிந்து கிடக்கின்றன
இடையிடை காற்றிடையே இருமல்
அது உன் கணவனாருடையதா

19.09.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரக் குப்பை

தெருவிலிருந்து துணிவில் வீட்டுப் படியோரம்
தூங்கிய பொழுதில்
கரமொன்று கொதிநீர் ஊற்றியது

நடுங்கும் குளிரில்
நெருடும் சூட்டுக்குள்
வியூகங்கள் தகர்த்த உக்கிர மேனியுடன்
புகுந்து கொள்கிறேன்

பிசைந்த பயங்கரம் தட்டிவிட்டு
மூன்றாவது மதுவெனும் பறவை
கொய்தெடுத்துப் போக எரிகிறேன்

இலக்கைத் துலாவும் பகல் வெளிச்சம்
புலப்படாத பாதாளத்தின் ஆழத்தில்

நான் பயணப்படும் போது
சொல்லி அனுப்பிய சகோதரி
நகரக் குப்பைகளைச் சுட்டினாள்
துளையிடும் நடுக்கத்தில்
விரல் ஒன்று துண்டாகிய கையோடு
நுனிநாக்கில் இறுக்கக் கட்டிய
ஒரு முழ நூல் வழி தீப்பற்றி
உடலுக்குள் சமாதானம் தயாரிக்கச் செல்கிறது

பூத்தலை முன்வைத்த தாவரம்
ஒட்டுண்டு போகாத இயல்போடு
நாளையும் இருக்குமா என்பதே
என் சந்தேகம்

07.04.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்

தலை கவிழத் தீட்டுகிற
தன் முரட்டுத் தூரிகையால்
சுவாலை பூத் துணியை உரிக்கிறது

கொம்புகள் ஆட்டி அசைபோடும் பசுமாடு
கழுத்துமணி உடையக் கத்தும்
பொழுதொன்றில் நிகழும் என் மரணம்

உக்கி வழிய என் ஊனத்திரவம்
அணையுமோ தீ
தெரியாது

13.06.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேர்வை

அறைக்குள் அத்து மீறிய அவன்
இரக்கப் புல் நுனி தொற்றி
சிறு வயதுகளில் தத்தளித்த
சிற்றெறும்பு நசித்து
முட்டிக் கால்வரை இறங்கினான்

பசுவொன்று உரக்கக் கத்தியதும்
காட்டாறு கரை புரண்டோடியதும்
ஞாபகமற்றுப் போகலாம்
நெரிசலான அவஸ்தையில்
அரும்பும் வேர்வையில் கிறங்கி
பொங்குகிறது ஒரு மாகடல் உள்ளே

16.07.1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் விழுது

துரிதமுணர்ந்து கிடக்கிறதென்
மனப்பறவையிட்ட எச்சம்
குறும்புக் கண் சிமிட்டல்
கோபத்துடன் எச்சரித்தல்

மையத்திலிருந்து நெருங்கி வருதல்
துடிப்பதை அறிதல்
பாவமாக இருத்தல்
நகம் கடித்தல்
தொண்டைக்குள் கை நுழைத்து
நீர் விழுது விடல்

நாவால் தடவுதல்
கத்தரிக்கோல் விளிம்பில்
பயணமாகி மீழ்தல்
அறிக்கை சேர்ப்பித்தல்
நின்று குனிதல்
தாமதித்தல்
பேச்செடுக்காமல் வெட்டல்

அந்நியத்தோடே கதைத்தல்
துணிப் பூக்களிருக்கின்ற செடியில்
எதையோ ஆய்தல்
அலசுதல்

உடையணிதல்
யாரையேனும் விசாரித்தல்
முதல்முறை வந்திருக்கும் விருந்தினனைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலர்தலுக்குப் பரப்பப்பட்ட
நாவறுந்த மனிதன் மீது
தொடருக உங்கள் சத்திரசிகிச்சை

20.05.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்டுத் துவாரம்

வெளியே சென்று வர மலராயின
கூம்பினால் கொத்தலாயின
கிழிந்து இரத்தம் கசிய
சேர்க்க மறுக்காத சாளரங்கள்
பறவைகள் குஞ்சு பொரிக்கச் சொண்டு நீட்டும்
இடைத்தங்கல் கூடுகள் வசதியாய் எச்சமிடவும்
செடி கொடிகளும் வளர்ந்தன

மருதாணிக் கூம்புகள்
வேரின் நரம்புவரை தொட்டன
சீலையில் சிறிதளவு பிய்த்தெடுத்து
என் கேசக் கூண்டின் காயத்துக்குக் கட்டியது
உள்ளிருந்து இன்னும் எட்டிப் பார்க்கிறது
பட்ட நாட்களில் அரிசி திருடிய
பொன் வண்டுத் துவாரம்

அறுந்து திரிந்த காலம்
உம்மா லேசாக முக்காடிட்டு
வாப்பா இருப்பதாய் மிதியடியை
உசத்திக் காட்டிய ஓவியம்
பதியன்கள் போட்டுப் போட்டு
முளைத்துப் பறந்து இங்குமங்கும்
நட்சத்திரங்கள் இறைத்த பெரு நிலம்

கண்ணீர்ப் பெருக்கை திருட்டுத் தனமாய்
திசை திருப்பிய பலகணி
ஒளிந்து கொண்டு அநியாயங்களை
எறிந்துவிட உதவியது
மயிலிறகு போட்டு விட வந்து விழுகின்றன

27.09.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுக்குச் சட்டை

மலையிடுக்குகளில்

தெரிந்த மொழிகளில் கத்தக் கேட்கும்
எதிரொலிபோல் அமிழ்ந்தும் ஏவியும்
கூடடைந்த புறாப்போல்
முனகிக் கொண்டிருக்கிறாய்

கனத்த பூட்டொன்று
முதுகில் மோதிச் சிதறுகிறது
குருவிகளுக்கான முற்றம்
குழந்தைகளுக்கான தொட்டில்

மழை
அதிர்ந்து கொட்டும் முரசில்
கொடுகி மறைகின்றன
அவசரத்துக் கென்று
எதுவெல்லாம் வீசுகிறாய்
உன்னுள்ளே மேலெழுந்து
தழுவிக் கொள்கின்றன
அழுக்குச் சட்டைகள்

வலை விரித்து
அச்சரங்கள் மாறி
இம்முறையும்

தனித்திருக்கிறது
உன் அழகு மட்டும்

03.06.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டு முகம்

தெருவின் மீது துயர் இறங்கிய
மந்திரப் பொழுது அது

பணக்காரச் சந்தை பள்ளிவாசல் மூலையென
எனதூரின் சனமூட்டம் அடிவானம் வரை தெரியும்
சிலிர்த்த பச்சை வயலில் லயித்துப் போகும் மனது

கடல் மயங்கிய வேளை
கைதான மீன் குஞ்சின் சலசலப்புக் கேட்கும்
பனையான்கள் இவ்விரண்டாய்
கூடைக்குள்ளிருந்து தெறித்துப் பாய்கின்றன

மேகத்தின் கூந்தல் தொட்டு
நேர்த்தியாய் தலைவாரும் காற்றெழுந்து
முகத்தில் விழுந்து இளைப்பாறிப் போகிறது

ஆற்றின் குறுக்கு வெட்டு முகம்
வெளிர் மஞ்சள் வெயிலுக்கு
மருதாணிச் சிகப்பிடவே விழுந்து துடிக்கின்றன
படிக்கல் பாரத்தில் அங்காடிச் சொற்கள்

16.07.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசப்பது ஒரு கவர்ச்சி

கசப்பதும் ஒரு இனிப்புத்தான்

பாகை இலை சுண்டி
உண்

வேப்பந்தளிர் பறி
வாயில் இடு
சப்பி உணர் அதன் சுவையை

பொட்டுப்போல் சிலிர்த்து நிற்கும்
திராய் இலை இணுங்கு
பால் ஆணம் காய்ச்சி
வயிறு முட்டப்புசி

உப்புச் சேர்க்காதே
சுவை கெட்டுப் போகும்
பசியாறு

வாழைப் பூவிலும்
ராவுள் இலையிலும்
சிறுகசப்பு உண்டு
வயிறாறப் பசியாறு
புளிவிட்டுக்
கசப்பெடுக்க முயலாதே

கசப்பது ஒரு அழகு
கசப்பது ஒரு வடிவம்
கசப்பது ஒரு கவர்ச்சி

அவளைப்போல்

03.10.1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலா நடுதல்

முதல்நரை முடியும்
உனக்கும் எனக்குமான இடைவெளியும்
எரிதுண்டுகளாய் என்மேல் விழுந்தன
குப்புறப் படுத்தெழும் சமயங்கள்
இப்போது பழகிவிட்டன

பிடிமானமற்றுப் போய்
கட்டிலில் கிடத்திய இமையில்
எவ்வாறு நிலா நட முடியும்
எல்லாத் திசைகளிலும் கமழும்
ஏலக்காயின் வாசனை
இரண்டு கிராமங்களையும் நீர்தெளித்து
எழுப்பிச் செல்லும்
கோடை மேகத்தோடு துணைபோகிறது

சிறு பிராயத்தில் நிலத்தில் கவிழ்த்தப்பட்ட
சிரட்டைபோல தூரத்தில் கிடக்கிறேன்
பழஞ்சோற்று நீரில் கண்விழிக்கும் வாப்பாவை
ஆரத் தழுவி
உம்மாவுக்குத் தெரியாமல்

17.07.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லிப் பா

ஒரு வரியை அல்லது ஒரு வார்த்தையை
பிடுங்கிக் கிழித்தெறிவாய்
அயல்வீட்டுப் பெண்களோடு
ஒப்பிட்டுக் குமைவாய்
பேனாவை முறிப்பாய்

ஆவேசமாய் சிதறுகின்ற
உன் அபத்தச் சொற்களை உருக்கி வார்த்து
என் நண்பர்களின் காதுகளில்
இனிக்க ஊத்துவாய்

ஒரு நொடி நேரம்
படுக்கையில் களைப்புடன் கிடக்கையில்
நெஞ்சக் கூட்டுக்குள் கைவிட்டுத் துழாவுவாய்

தடித்ததொன்று என் நடு முதுகில் உறுத்துகிறது
ஒரு பல்லியைத் துரத்தினேன் என்று
நுரைக்கச் சொல்

12.01.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்காளி மணிகள்

வேப்பம் பழத்தில் ஈர்க்கில் ஏற்றி
முட்டாசி இன்னா தின்னு என்பாய்
குருவிச்சம் பூப்பறித்துத் தருவேன்
'சுள்' என்ற புளி அடித்துக் கண்கூசி நிற்பாய்

பகல் சாயும் நேரம் பசளிப் பற்றைக்குள்
தும்பி பிடித்து நூலில் கட்டி தூக்கில் இட்டால்
உன் கண்கோளை ஓரம்
ஈரம் கசியும்

நீ ஓலைக் குருத்தில் பம்பரம் நெய்து
கையில் திணித்து
ஓடு ஓடு ஓடேன் என்பாய்

நான் புழக்கடை பக்கம் வழியாக ஓடி
கிணற்றடியில் வருவேன்
மலம் கட்டி நான் துடிக்கும் நேரம்
உம்மா உப்புத் திரி வைத்து
ஓட்டம் காட்டுவதும் இப்படித்தான்

உன்னோடு ஒரு நாள் ஒன்றாது போனால்
முட்டை தொலைத்த ஆக்காட்டிபோல
தேடுவாய் பதறுவாய்
அத்தம்
பேசாமல் போ போ என்றால்
கயிறு கட்டி இரத்தம் சுண்டும் விரலின் நிறத்தில்
உன் முகம் மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பாளிக் குழலால்
இரட்டைக் கண் துப்பாக்கி செய்து
கிடுகு வேலியைப் பொத்து நீட்டுவேன்
பேன் பார்த்த உனது உம்மாவைக் கட்டி
கீர் விட்டு அழுவாய்

புட்டிகள் வெட்டிச் சமதரை செய்து
என்றோ தூவினோம்
ஒருவர் ஒருவராய் இருவரும் தக்காளிமணிகள்
அவை மண்ணோட மண்ணான பின்னும்
அங்கொன்றும் இங்கொன்றுமாய் எனக்குள்

உனக்குள்ளுமா
நேற்றொன்று இன்றொன்று

20.07.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூனிப் பெத்தா

தூறும் மழையின் வரிகளுக்கிடையே
நனையாமல்
குனிந்தும் நிமிர்ந்தும் வருகுது சத்தம்
லொக் டொப் லொக் டொப் லொக்டொப்

கூனிப் பெத்தா
பாக்குப் புளகுடன் புகையிலை மெல்லுகிறா
சுண்ணாம்பு அடைத்த கேத்தலை இழுக்கிறா
வெற்றிலைப் பகளி
முடிதலும் தெரியாமல்
நிலவு புரளப் புரள
இரவு அதிர அதிர
உரலுக்கும் உலக்கைக்கும் வேலை வைக்கிறா
லொக் டொப் லொக் டொப் லொக் டொப்

செத்தை முழுக்கத் துப்பித் துப்பியே
சிவப்புச் சிவப்பாய்
அங்கும் இங்கும் தேசம்போல
சிலந்தி ஓவியம் பீய்ச்சிய ஒற்றைக்கால் மூலை
திந்தை விலகிய கிரான்பன் பாயோடு
ஓரம் சழிந்த தலையணை ஒன்று
அச்சமே இல்லாத மகிழ்வில்
பெத்தா
மேல மேல ஓங்கிறா துவைக்கிறா
லொக்டொப் லொக்டொப் லொக்டொப்

சாணம் மெழுகிய திண்ணை நடுவில்
பூனை விரசும் பிரம்பு கிடக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசவு தெறித்த கதவை
இழுத்துப் பூட்டிய தைரியம் தெரியுது
முறுக்குமணி கழுத்தில் தொங்க
அல்லுக்குத்தும் பூட்டுக்காப்பும் அடிக்குது வெளிச்சம்
சோமன் உடுத்தி
தைலாப் பொட்டியின் பூட்டுக்குப் பதிலாய்
தாக்கத்தி சொருகி
அழகு பருகும் பெத்தா
கொதுப்பக் கொதுப்ப
தூறும் மழையின் வரிகளிடையே
நனையாமல்
குனிந்தும் நிமிர்ந்தும் வருகுது சத்தம்
லொக் டொப் லொக்டொப் லொக் டொப்

03.04.1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையும் சித்திரம்

தாட்சண்யமின்றி படரத் தொடங்குகிறது
வற்றாளைக் கொடி
சுமையை மாற்றிக் கொள்ள இயலாமல் போய்
தோள்களிரண்டும் வலிக்கிறது
சுமக்கப் பழகின பின் ஆனை கேட்டாலும்
தூக்கலாமென்ற மனம் வருமே

நடு முதுகில் வேர்வை கசிகிறது
சரசரத்து ஒதுங்கும் பாம்புகள் போல

பூர்த்தியான சித்திரம் உடம்பென்றால்
ஏன் வளர்கிறதோ
மேசைக் காற்றாடிபோல் சுற்றுகிறது தலை
விரல்கள் தடவி காதலின் நீளமறிதலைவிட
பூச்சரித்த சுவர்கள் ஓவியம் காட்டுதல் மேல்

காலாடிய நடனம் களைப்பாறிய போதுதான்
கண்கள் அறிந்தன
ஓசைகள் மறந்து உலகம்
இன்னும் தூங்கவில்லை என்று

19.09.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் முள்

தொண்டைக் குழியில்
திசை தெரியாமல் குத்திக் கொண்டிருக்கிறது
மீன் முள்

மூட்டை கட்டிக் கொண்டு ஒதுங்கி விடலாம்
வருத்தப்படுவாயோ என்ற அடைமொழி
வலிக்கிறது.

14.05.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவுக்கு நார்

சிகப்புப் பூக்கள் வெளிறி
நிலா தொப்பலாய் நனைந்து
இரட்டையாய்ப் பிரிந்திருக்கும் நீர்ப்பரப்பில் கரைமுட்டி
ஊசி கோர்த்த ஞாபகத் துளைவழி
காற்று விக்கி

தலைமேல் அழுத்துகின்ற சுமை தவிர்க்க
வேலிப்படல் தாவிய கால்கள் ஓடிக் களைத்து
மண்ணை மடித்துக் கொசுவி
மூங்கில் கம்பங்களில் நடந்தபோது
குழி முயல்கள்போல் வேட்டையாடப்பட்டு

மூளிச் சிற்பங்களின் மினுங்கலுக்கப்பாலும்
அந்தரத்தில் நொய்ந்து உயிர் துவண்டு
வலியை உமிழ்ந்து தழும்புகள் மிஞ்சி

இழையும் சவுக்கு நார்
முதுகில் பொருத்திய கோடுகள்
தூரிகை வரைவாய் வெளிருண்டு
ஆடிக்கொண்டிருக்கிறது

முகத்துக்கு நேரே மாட்டப்பட்ட தூக்குக் கயிறும்
வேரில் சில மண்ணும்

27.04.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையின் பிரசங்கம்

பூக்களிலிருந்து உன்வாசம் உணர்கிறேன்
என் கனவு சில நேரங்களில் பலிப்பதுபோல
ஒரு மழை ஓய்ந்த இருளில்
உன் கொலுசொலி கேட்கிறது

நிறை மாதத்திலும்
என்ன அழகாய்த்தான் இருக்கிறாய்
உன் விரல் பற்றி ஆடும் கணையாழி
வானம் பொய்த்துப் போக
பூமிக்கு வெளிர் மஞ்சள் நிலவு

குளிர் நீர் ஊற்றும் மண்குடமாகிறேன்
என் துளைவழி கசியும் சிறு நீர்ப்பருக்கைகளில்
தொட்டு எடு உன் இதழ்களை

இருட்டறையில் அமர்ந்து
உன் ஞாபகங்களில் குதிக்கும்
காற்றையெல்லாம் அவிழ்த்துப் பார்
எதிலும் சிக்குண்ணாத இந்தப் பறவை
எதையோ கத்திப் பாடுவது கேட்கிறதா
அடர்ந்த மழையின் பிரசங்கம்போல

17.07.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாலை மரம்

இப்படியாகத்தான்
இமைகளுடைய பிழம்புகளென சொல்வதற்குள்
நீ கண்ணெட்டி நிற்கிறாய்
இரு புறமும் அவசியமென்றிருந்தால்
வேறொரு உருவம் நீ
அடுத்ததாக ஒரு திருப்பம் இடையில் கிடக்கிறது

பழுத்த மெல்லிய உதடசைவுகளில்
கிழித்தெறியப்படுகின்றன என் குறிப்பேடுகள்
விளக்கணைகிறது
சட்டைப் பைகளைப் பத்திரப்படுத்துகிறேன்
போராட்டக்காரர்களின் ஆடுகளம் என் படுக்கை

நீ கொஞ்சம் நிமிர்ந்திருந்தால் என்ன
வெகு நாளான பின்னரும் என் குழந்தைகள்
ஊஞ்சல் கட்டியாடும் ஆசையை விடவில்லை

வேரை மறைத்தாயிற்று
இடறி உன்னில் வீழாதிருக்க
அசுரக் காற்றில் வசப்படுத்தி விடுகிறாய்
தூங்கும் பருவம் கீற்று விலகிய இடங்களில்
உன்னை நட்டது யாரென்று தேடுகிறேன்
என் சாலை மரமே

12.02.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பித்தம்

தண்ணீரில் நனைந்த சூரியனை
தீந்தையடிக்க அனுப்பினோமா
வானவில்

வெண்பனிப் படுக்கையில் நீரோடுகையில்
சிறுநீர் கழிக்கிறது வானம்

குழம்பித் திரிகின்றன புள்ளினம்
இன்னும் ஒரு கல் விழுந்தால்
தளும்பி விடும் கடல்
கால்கள் இல்லாமல் மேகம் நடக்கிறது
மூச்சு முட்ட அந்தி ஏவுறை பறிய

அந்த மழைக் காட்டிடை விறகுகள் கிடையாது
சுள்ளிகளுமில்லை
பூமித் தலையெங்கும் நரைகள்
வெயில் வெட்டிக் கசிந்த பித்த வெடிப்புகள்
குண்டூசி தைத்துச் சுகமாகின

01.05.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்புடவை

மேலும் எனக்கொரு பயமுண்டு
அவன் உருவத்தில் இவனைக் கண்டு
மரணித்துப் போகிற பிறகு
பிடுங்கி ஆதிப் பெயர் கேட்பார்களோ
என்று

ஊமையாகிக் கத்துகிறோம்
சீறி எழுந்தபோது கால்கள் பின்னின
இலை விழுந்து
முதுகெலும்பு உடைந்தது

முகத்துக்கு நேருள்ள மைய வாடிகளும்
காலுக்குக் கீழுள்ள எரிமலைக் குழம்புகளும்
வெடித்தோய்ந்த பின்னரும்
வாய்சப்பி வாய்சப்பி

சுவர்கள் சூழ்ந்த நமது அறைகளில்
நாட்காட்டிகளுக்குப் பதிலாய்
செருப்புகள் ஆடும்படி தொங்கவிடல் நலமே
உன் வலிப் பிழிறலில் எழுந்திராத சமூகம்
உன் மூச்சிரைப்பில் நீர்ப்பாத்திரமேந்துமென்று
நினைத்தாயா

அந்த விரல் அழுத்தியும் கோபித்து வெடிக்காத
சடலமே நீ
மீளவும் முளைப்பாய் என்றா தோண்டி எறியப்பட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு விரட்டியதில் மிச்சம் முடியவில்லை
அவசரத்துக்கென்று உடுத்திக் கொள்ள
மண்
புடவையாகி மசிந்து கிடக்கிறது

02.03.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு உதிர்த்த பகல்

சிறு வானம்
சிறு மேகம்
சிறு நிலவு

அந்தியால் சாய்ந்த சூரியன்
ஆகாயத்தில் வெடித்த வெள்ளி

பனையோலைப் பெட்டிக்குள் ஒரு பாலகன்
பசி மறந்த தெரு நாய்
பொல்லூன்ற முடியாத கிழவன்
இருளான பூமி
இன்னும் வேண்டுமா சுதந்திரம்

நரி ஊளையிடும் மயானமாகி
பற்றி எரிகிறது கடல்

கொதிக்கின்ற நிலங்களில்
ஆடு தலையில்லாமல் மேய்கிறது
ஆந்தை கண்ணில்லாமல் அலைகிறது
வௌவால் சிறகில்லாமல் பறக்கிறது

விடியும் வரைதான் நாமிருப்போம்

காலையில் இறகு உதிர்த்த பகல்களில்
நீர் வேண்டி மலிந்துபோன தேடல்களில்
நாம் ஞாபகமிருப்போமா

04.06.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரிகை வர்ணம்

நான் குனிகிறேன்
உன் தோளைப் பற்றாமல் அலை ஒத்தி
தலைக்கு மேலே பட்டம் விட்டு
வீடு திரும்பும் சிறுவனாய் இப்போதும் நான்

வழக்கம் போல
இரத்தம் தீர்ந்து மாலைச் சூரியன்
பாறைப் புறத்தில் பதுங்குகிறது
தலை மட்டும் வெளியெடுத்த நிலா
விடும் தூரிகை ஒளியில்
என் மணல் வீடு மீண்டும்
துலங்கக் காண்கிறேன்

முற்றுமாய் என்
சினேகிதங்களைத் தேடுகின்ற
கடற்கரை வெளிச்சம் மறைகிறது
ஆடுகின்றன பழைய தொட்டிலுக்குள்
நட்சத்திரக் குஞ்சுகள்

17.02.1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகக் குகை

பால் தன்மை கூட வலிமையானது
பிரமிப்பிலாழ்த்தும் உலகத்தில்
கொசுக்கள் மொய்த்த படி கிடக்கும்
தேநீர்க் கோப்பையில் ஒட்டிய எச்சம்
திடகாத்திரம் மிக்கது

ஆட்டுக்கால் கொத்துகையில்
சிதறும் எலும்பு மச்சைகளில்
வீரியம் கலந்திருக்கும்
கோர முகத்துடன் நெருங்கும் ஒருவனின்
தலையைப் பிய்த்துக் கொள்ளவும்
தாவும் கைகளில் திடமிருக்கும்

கையசைவைப் புறக்கணித்து
புகை வண்டியில் பயணிக்கும் அவளின் கூந்தலுக்குள்
ஓர் அணு உலையே குடியிருக்கும்
கிளைக் கொன்றாய்ப் பூத்து
ஞாபகக் குகைகளில் தவமிருக்கும் அந்தரங்கங்களை
தொடுதல் என்ற சொல்லே சக்தி அடங்கலானது

07.01.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படுக்கையிலும் உன் கைகள் விரிந்திருக்கின்றன

பாலில்நெய்த குஞ்சுப்
பறவையே சலித்தா
முதன்முதலில் நீ பதித்த
பனித்துளி விரல் முத்தம்
பின் தொடர்கிறது என்னை

மிகப்பிடித்த காதுகள்
துளிர்த்திருக்கும் 'அழகு'
இன்னொரு பாத்திரம்
அள்ளியெடுக்கும் அளவு
கிண்ணங்களில் நிரப்பப்பட்டிருக்கிறது

சலித்தா உன் கடைசி வசனம்
புன்னகையாகவுமிருக்கலாம்
உன் குடைவெட்டுப் பாவாடை
விசிறும் பருவக் கதகதப்பு
பொறுக்க ஏலாது மகளே

உயிரோடு புதையப் புதைய
சிறிது தூரம் ஓடி ஏமாந்தேன்
படுக்கையிலும் உன் கைகள்
விரிந்திருக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கண்ணாடியில் உதடுகள் உரசி
வெளிறிப் பறந்த என் சிட்டுக்குருவியே
காற்று பிடுங்கி எறிந்த குடைபோல்
மரமொன்றில் ஒட்டிக் கொண்டிருக்கிறேன்

மழை பெய்கிறது

10.07.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குறுதியளித்த உன் பழைய புன்னகைகள்

கடைவாயில் பாய்கிறது அம்பு
நீ பரிசளித்த முத்தங்கள்
தலைகுனிந்து நிற்கின்றன
ஆயிரம் வார்த்தைகள் ஏறிநின்று
மரக்கிளை பாரம் தாளாமல்
முறிந்து விழுகிறது

பறக்கும்
கருக்கலில் பறவைகள் கவ்விக்கொண்டு
இரத்தம் பரவிய என் மனப்பாடலை
பனிக்கன்றுகள் போல்
முளைத்திருக்கின்றன
நீ பின்னிய இரவுகள்
வாக்குறுதி அளித்த உன்
பழைய புன்னகைகள்

விரலிடுக்கில் மொழி பேசி
உயிரில் தீட்டப்பட்ட பசி
சுளை சுளையாய் உதிர்ந்து
உப்பில் சங்கமிக்கிறது

ஒரேயொரு நிறத்தில்
வார்க்கப்பட்ட நம்மிலிருந்து
பிரிக்காலமென்றா நினைத்தாய்
அதை

07.07.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைந்து வந்த பாம்பில் மிதித்தவள்

குருத்து மணல்
நட்சத்திரங்களின் வெளிச்சத்தில்
தண்டித்துக் கொண்டிருக்கிறது
அவளுடலை

எழுவதும் அமர்வதுமாய்
அதைத் துடைத்தொழிக்கவே
அவசரப்படுகிறாள்
மொய்த்துக் குமையும் குருத்து மணலுடன்
சிப்பிச் சிதில்கள்
விடுபடும் பறவை இறகுகள்

வேறு முகங்களும் முதுகுப் புறங்களும்
பள்ளிக்கு அழைக்கும்
மகிழ்வோடுதான்
கையாளத் தெரிந்தவர்களை
அழைக்கிறாள்

தூதில் அதிர்ந்து கலையும் கூந்தலில்
தூங்கவும் துலாவவும்
மீன்கள் நுழைகின்றன
முகத்தைச் சுழித்து
விழித்திருப்பதை நிராகரிப்பதே
அவள் விருப்பமாய் அமைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எவளும்
குருத்துமணல் பரப்பில்
சரிந்ததில்லையா
அலைந்து வந்த பாம்பில்
மிதித்ததில்லையா

11.02.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகத்தில் வெந்து கிடக்கும் கைவிரல்கள்

இங்கேதானிருக்கிறது
கைவிடப்பட்டவளின் வீடு
வரவேற்புக் கொடிகளாக அசையும்
அவள் உலர்தலுக்குப் போட்ட ஆடைகள்
ஒற்றையடிப் பாதைகள் அருகில்
பாசி ஓவியங்கள்
நெடியதொரு கோடையிலும்
நிராதரவாய் விம்மி வெடித்த
குருவீச்சை மரங்கள்
பால்பொங்கி வழிந்த
பற்றைக் காடுகள்
கூர்தீட்டி உற்றுப்பார்க்கின்றன
வெட்டவெட்ட வளர்ந்து
உன் மார்மீது படர்ந்த
என் முடி ஓலை
உருவியெடுத்துப் பேனும் ஈரும் பார்த்த
கைவிரல்கள்
எந்த நரகத்தில்
வெந்து கிடக்கிறதோ

03.04.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முணுமுணுத்தபடி நீராடும் அவள்

யோசிப்பதுபோல் கொடி
மடிந்து கிடக்கிறது

தன்னை அலங்கரித்துக் கொள்கிறது
நீரின்மேல் விழுந்து காற்று

இருளைக் கூட்டிலிறுத்தி
ஒளித்து விளையாடுகிறது
அவள் நிர்வாணம்

இனியதும் மிகக்கொடியதுமான
குளிர்
கொடிகளைத் தீண்டி
மிகப் பிடித்த
இலைகளை அரிந்து
மூத்திரம் கழித்துவிட்டுப் போகிறது

முணுமுணுத்தபடி நீராடுகிறாள்
அவளின் பணிவற்ற இடையில்
உறங்கிக் கழிகிறது
இரவு

14.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ மதுவருந்தும் ஓவியம்

காட்டுத்தீ கண்டு திகைப்புற்றேன்
மீசையை முறுக்கி விட்டவாறு
தரையில் எழுந்து நின்ற பாம்பை
சற்றே அணைத்துப் பார்க்கிறேன்

வீட்டுக் கூரை விளிம்புகள்
நெளிந்து புகைந்து கொண்டிருக்கின்றன
எப்படிச் சாந்தியடையும்
இப்பயங்கரம்

ஒளியின் முலைகளில் பால்அருந்தி
கரங்களை விரிக்கிறது சூரியன்
நிலத்திலிருந்து கூந்தலை விளாசி
தொலைவிலிருக்கும்
என் வசிப்பிடத்தை
துணிபோல் மடிப்பது
தீ மதுவருந்தும்
ஓவியக் காட்சியா

04.07.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியும் முலைகள்மேல் படர்ந்த கூந்தல்

நீ மல்லாந்திருக்கிறாய்
நிறைமாதக் கர்ப்பிணியாக
பெரும்வலி தவித்தடங்கியிருக்கிறது
வெருண்டெழுந்து
உனைத்தேடிய வெட்டரிவாள்கள்
ஓய்ந்திருக்கின்றன

நக்கித் தலையில் அள்ளி வைக்கப்பட்ட
குப்பைகளையெல்லாம் எரித்திருக்கிறாய்
பேருந்து வாசல்களில்
நிற்பதை விடுத்து
உள்ளே உனக்கு ஆசனம் கிடைக்கிறது

வெட்கத்தில் நெளிய விட்ட
பிடிவாதமான உன் கூந்தல்
சரியும் முலைகள்மேல்
படர்கிறது

மற்றெந்த நாளை விடவும்
உன் பாவாடைக் குடைக்குள்
படுத்துறங்குகிறது காற்று
நீ உதிர்க்கவிருக்கும் பூ
தொடக்கமா முடிவா என்றுதான்
தெரியவில்லை

28.05.2009



7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவில் உரையாடித் திரிந்த காகங்கள்

அலுப்பாகத்தானிருக்கிறது
மன்னியுங்கள் நண்பர்களே

இமைகள் துவண்ட
என் குழந்தைகளே

நான் ஒரு வண்ணாத்தி செய்தேன்
இன்று
இருக்கையில் இருந்தே
அடைமழையைத் திசை திருப்பினேன்

நீங்கள் நுழைய முடியாத
குகைவழி சென்று
தேனெடுத்து வந்துள்ளேன்

உங்களை முத்தமிட விரும்பிய
நேரங்களை
தெருவில் உரையாடித் திரிந்த
காகங்களிடம் ஒப்படைத்து
ஒரு தந்திரக் கூடை பெற்றேன்

நண்பர்களே
குழந்தைகளே
மன்னியுங்கள்
சிறுபொழுதை நம்பி அதுவும்
ஒரேஒரு ஞாயிற்றுக்கிழமை
மட்டும்

12.07.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருமுகிலை விழுங்கிய பறவைகள்

எதிரெதிரே பூனைகள்
துள்ளித் துள்ளி விளையாடுகின்றன
தாமதமாய் வீடு திரும்பிய
தன்கணவனை உதைக்கிறாள்

காற்று விசையில் முகம் உலர்த்தி
பறவைகள்
கருமுகிலை விழுங்கிப் பறக்கின்றன
கரையைக் கடித்துரைக்கிறது கடல்
உலையில் கொட்டிய
அறிமுகமில்லாத மின்னலை
வறுக்கிறது வானம்

முதல் துளியாய்
அரிந்துவிழும் மழையிலும்
பறக்க ஆரம்பிக்கிறேன்
நான்

04.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னைச் சாய்த்த உன்பெயர்

தக்கையாக மிதக்கிறேன்
என்னையும் இரவையும்
கம்பீரமாகச் சாய்த்திருக்கிறது
உன்பெயர்

பிழையாகத் தோன்றியிருக்கிறேன் நான்
பல்லிடுக்கில் சூசுமளவு
இமைத்து இமைத்து
உன் விழிவிட்ட ஒளிக்கீறு

நெய்யாகி வழிந்து
மலம் கழிவதுபோல் வலித்து
அருவருப்புத்தோன்றி ஊர்ந்த நிலையில்
ஸ்தம்பிக்கிறது குடல்

மீண்டும் கருண்டு
முறிகின்றன வண்ணச் சிறகுகள்
கண்களில் நீர் இறங்கி
அலையாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதாணியில் சிவந்த நகங்கள்

தன்னந்தனியே அலையும்
நிலா தின்ற முற்றம்
மருதாணியில் சிவந்த
கால் நகங்களில் கிளர்ந்து எழுகிறது
ஒரு பழைய வலி

அடுப்பையும் தீயையும்
வலது கண்ணில் கூசாமல் சொருகி
புதைந்த ஞாபகங்களை எரிக்கவா
தடித்த திரியாகி வருகிறாய்

கீழே வைக்க மனமின்றி
ஒவ்வொரு ரகசியங்களையும்
தாடைக்கடியில்
கட்டித் தொங்கவிட்டுள்ளாய்

கர்வம் அடர்ந்த என்முகத்தை
முழுவானமும் படர்த்தி
படிக்கட்டுகளில்
ஏறி நிற்கிறாய்

துணி உலர்த்தும் கொடியில்
முறுகி ஆடுகிறது
என் ஜன்னல்வழி தெரிவது
உன் 'அது'வா

20.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருந்தாளிகள் அங்கே காத்திருக்கிறார்கள்

தூண்டில் முள்ளில் உறங்குகிறது இரை
இந்நேரம் கிளம்பியிருக்க வேண்டும்
இவ் இரைக்குரிய மீன்

பதிலற்ற அற்ப எண்ணங்களுடன்
உட்கார்ந்து இருமுகிறான் மீன்பிடிகாரன்

இறக்கமட்டுமே தெரிந்தவை மீன்கள்
நெளிந்து விளையாடி வருகின்றன
கோடுகள் கிழித்துப் படங்கள் வரைந்து
வருகையை நிறுத்த முடியுமா என்ன

வெள்ளமும் நுரையுமாய் சிலிர்க்கச் சிலிர்க்க
துடிக்கத் துடிக்க ஒரு மீனைப்
பிடித்துப் போடுகிறான்

கழுத்து வேறாகி வால்துண்டும் பிரிந்து
நடுத்துண்டு கிடந்து பொரிகிறது

வாத்தியங்களும் பாடல்களும்
ஒலிக்க ஒலிக்க
விருந்தாளிகள் அங்கே காத்திருக்கிறார்கள்

01.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலையும் பட்டுக்கடல்

மழையில் என்னை நீ
விட்டுவிட்டுப் போனதாலோ
என்னவோ
மனம் எப்போதும்
தும்மிக் கொண்டிருக்கிறது

காற்றெழுந்தால் அலையும்
பட்டுக்கடல் ஓசை
செவிகளில்
எரிந்துகொண்டு நுழைகிறது

உரையாடத் துவங்குகின்ற
நேரங்களிலெல்லாம்
மேய்ந்து கொண்டிருந்த
உன் விரல்கள்
தரம் பிரித்தலையும்
கூடவே செய்தன

உயிருள்ள பாவையாகி
மரக்குதிரையில் உட்கார்ந்திருக்கிறாய்

நினைக்கிறாய்
இம்முறையும் நான்
பந்தயம் பிடிப்பேன் என்றா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவின் மீது ஏறிவந்த வெறிக்குதிரை

விருந்துக்கழைத்தேன் உன்னை
சந்தேகம் எப்போதும்
புரளாத பக்கங்களிலிருந்து
உரச நின்று சிரிக்கும்
ஒரு தீக்குச்சி நீ

நானும் பார்த்திருக்கிறேன்
எத்தனை சுற்றுலா சென்றிருக்கிறேன்
நறுக்கி விடாத உறவுகளை
அந்த வெறிக்குதிரை
ஒரு பூவின் மீது ஏறி வந்தா
தகர்க்க வேண்டும்

ஒரு மரத்தில் இலையிலிருந்தா
பெய்ய வேண்டும்
துவக்கமும் உரையாடலும் ஒன்றாகி
ஒரு கோடு கிழித்தபின்
துக்கமென்ன
பல்லிப் பீயா
கிள்ளி எறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேன் ஈரு இருப்பதாய் சுமாரான எதிர்பார்ப்பு

நீ தனியே வானில் பறக்கும் புறா
புணர்ந்த களைப்பில்
சிரிப்பை வரவேற்க
ஒருவரியில் கவிதை பாடுகிறாய்

உன் சிறகுகளிலிருந்து வியர்த்து
நிலத்தில் விழுந்த திரவம்
' நல்ல ருசி ' என்பதுபோல்
நாவு தட்டுகிறாய்

நீவி நேர் செய்யும்
உன் கொண்டைப்பரப்பில்
பேன் ஈரு இருப்பதாய்
சுமாரான எதிர்பார்ப்பு எனக்குள்

என் முற்றத்தின் முன்னே வந்தமர்கிறாய்
ஓர் அதிகாலை மட்டுமே
என் கண்களுக்குப் புலப்பட்டது
வட்டமடித்து மேலேறும்
நீ
ரொம்ப அழகாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்குமுன் பார்த்ததே இல்லைநான்

இதற்குமுன் பார்த்ததே இல்லைநான்
இதுவே கடைசியும் முதலுமாக இருக்கட்டும்
இதோ கிடக்கிறது ஒருகயிறு
உன் கூந்தலை அள்ளி முடிந்துகொள்
கடலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலில் சுழி ஓடும் நம்சந்திப்பு

கேள்விகள் மீதமிருக்க
நம்சந்திப்பு வெதுவெதுப்பான
பார்வைகளை அதட்டியபடி
முழம்முழமாய் வளர்கிறது
நின்ற நிலையில் உயிர் பிரிவதென்றால்
பச்சைத் தண்ணீரும் பருகாமல்
எப்படி

தனிமைத் துயரம் நீ சொல்லவும்
சலிப்புற்றேன்
புழுவை விழுங்கும் அவதியில்
தூண்டிலையும் உள்ளே விட்டாய்
ஓடும் நீரில் வீசி எறிந்துவிட்டு
அவனுக்கு 'அவநம்பிக்கை'
என்று பெயர் வைத்தாய்

நம்சந்திப்பும் உறவும்
ஆழ மூச்சிழுத்து
கடலில் சுழிஓடுகிறது
ஓர்உதவிக்குக் கைமாறாக
அவனைக் கூப்பிடட்டுமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகங்களுமில்லை
# கறையான்களுமில்லை

நழுவியோடும் போதெல்லாம் நீ
வழிமறித்து விடுகிறாய்

அலையும் கடலும் குறுக்கே
வெளிகளற்ற நிலங்களும்
உன்னோடு நின்றே
என்னையும் தடுக்கின்றன

அண்ணார்ந்து பார்க்கிறேன்
காகங்களுமில்லை
செத்தையைத் தட்டுகிறேன்
கறையான்களையும் காணவில்லை

உன் மதர்த்த முலைகள் இரண்டிலும்
அவை குடியேறி விட்டனவா
தெரியவில்லை

நீயும் பிறவும்
நினைவூட்டிப் பயமுறுத்தலாம்
என்னைக் கைதுசெய்ய அவர்கள்
இறங்கி வருவதற்குள்

என் சார்பாக நானே
ஆஜராகப் போகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் நினைப்பதுபோல

நாம் நினைப்பதுபோல மெதுமையாக
பனிபோல
இருப்பதில்லை எதுவும்
ஒரு மிதிவெடி போல
ஓவியனின் தூரிகை மட்டுமல்ல
பறவைகள்
மிலாறுக் கூட்டில் குஞ்சுபொரிப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பின்னிணைப்பு

| | | |
|---|---|---|
| மறுக்கிறது | = | ஒளிக்கிறது |
| காந்துகின்ற | = | எரிகின்ற |
| வம்மி | = | ஒரு மரம் |
| இரணம் | = | உணவு |
| சளுக்கிறது | = | விழுகிறது |
| மசண்டை | = | மாலைவேளை |
| ஆலை | = | ஆலமரம் |
| பனிமூசை | = | பனிவாடை |
| தத்திதத்தியாய் | = | கூட்டம் கூட்டமாய் |
| கொப்பறா | = | தோணியின் பெயர் |
| குதப்புறம் | = | பின்புறம் |
| கொச்சிக்காய் | = | மிளகாய் |
| எண்ணெய் ஊற்றலாம் | = | எண்ணெய் தயாரிக்கலாம் |
| மொழிவரை புதைகிறது | = | மூட்டுவரை புதைகிறது |
| சோப்புக்கட்டி | = | சவர்க்காரக் கட்டி |
| குடிலாகி | = | குடிசையாகி |
| பனையான்கள் | = | நன்னீர் மீனினம் |
| அத்தம் | = | கோபம் |
| செத்தை | = | கிடுகாலான சுவர் |
| மிதியடி | = | செருப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நபீலுடைய வெள்ளை மனம் எங்கோவெல்லாம் சென்று இதிலுள்ள மழைகளைப் பெய்திருக்கிறது. எல்லாக் கவிதைகளிலும் நபீல் நம்மைத் தூக்கிப் போட்டு பிரமிப்பை ஏற்படுத்தாது விட்டாலும், நபீல் கவிதை என்ற பெயரால் நொடிப்போடவில்லை. ஒவ்வொரு கவிதையிலும் அரைவாசிப் பாகத்திலாவது கவித்துவம் பொங்கித் தெரிகின்ற நபீலுடைய கவிதைகள் குறைந்தது ஒவ்வொரு மிளகு மாதிரியாவது "ஆகி" வந்திருக்கிறது. வாசித்து முடித்ததும்; கடித்தால் உறைப்பும் காரமுமாக இருக்கின்ற மிளகுகளைப்போல வாழுகின்றன. இந்த மிளகுத் தகுதியாவது ஒரு கவிதைக்கு இருந்தாலே போதும். எங்காவது ஓர் உப்புக் கல்லைக் கடனாக வாங்கியாவது ஒருவன் கவிதையை ரசித்து விடலாம். இந்தத் தன்மைகூட இல்லாமல் சவம் போல கடதாசிகளில் கிடப்பனவல்ல கவிதைகள்.

- சோலைக்கிளி

உயிர்மை
பதிப்பகம்

978-93-80072-85-2
9789380072852

32836005
200.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org